# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:146** **தேதி:-01.02.2017**

***நேரடி நியமன JE தேர்வில் இருந்த பிரச்சனைக்கு தீர்வு மற்றும் இலாகா தேர்வுகள்***

அன்பார்ந்த தோழர்களே,

நேரடி நியமன JE தேர்வில் ஏற்பட்டிருந்த பிரச்சனையில் தற்போது தேர்வு பெற்றவர்களுக்கு சாதகமாக DOT முடிவு செய்துள்ளது. தேர்ச்சி பெற்றவர்களை BSNL ஊழியர் சங்கம் வாழ்த்துகிறது. அதே சமயத்தில் BSNL கார்ப்பரேட் அலுவலகத்தில் சான்றிதழ் பரிசீலனை உள்ளிட்ட விஷயங்களில் முறையான செயல்பாடுகளை BSNL ஊழியர் சங்கம் உறுதி செய்யும். கார்ப்பரேட் அலுவலகம் நடத்திய தேர்வுகளை DOT நடத்திய விசாரனை அனுமதி கொடுத்துள்ளதால், முறையாக தேர்வு நடத்திய நிர்வாகத்தையும் BSNL ஊழியர் சங்கம் பாராட்டுகிறது.

**குழந்தை தத்தெடுப்பு விடுப்பினை 180 நாட்களாக உயர்த்து:-** இந்த பிரச்சனை தொடர்பாக நமது மத்திய சங்கத்தின் சார்பில் தோழர் சுவபன் சக்கரவர்த்தி DGS மற்றும் தோழர் ஜான் வர்கீஸ் AGS ஆகியோர் 30.01.2017 அன்று திருமிகு மது அரோரா PGM(Estt) அவர்களை சந்தித்து வலியுறுத்தினர். அவரும் அதில் கவனம் செலுத்த உறுதி அளித்துள்ளார்.

**கேடர் பெயர் மாற்றக் குழுக் கூட்டம் ஒத்தி வைப்பு:-** 03.02.2017 அன்று நடைபெறுவதாக இருந்த கேடர் பெயர் மாற்றக் குழுவின் கூட்டத்தை நிர்வாகம் ஒத்தி வைத்துள்ளது.

**இலாகா தேர்வுகள்**:- நமது மத்திய சங்கத்தின் சார்பில் தோழர் சுவபன் சக்கரவர்த்தி DGS மற்றும் தோழர் ஜான் வர்கீஸ் AGS ஆகியோர் 30.01.2017 அன்று திருமிகு அனிமா ராய் GM(Rectt) அவர்களை சந்தித்து கீழ்கண்ட பிரச்சனைகள் தொடர்பாக விவாதித்தனர்.

**அ) 11.12.2016ல் நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள்**:- 11.12.2016 அன்று நடைபெற்ற JTO LICE தேர்வு முடிவுகள் இன்னமும் வெளியிடப்படாததை நமது தலைவர்கள் சுட்டிக்காட்டினர். ஒரு சில தேர்வாளர்களின் மின்னணு பரிசீலனை நடைபெற வேண்டி உள்ளதாக பொது மேலாளர் தெரிவித்தார். இன்னமும் இரண்டு, மூன்று நாட்களில் முடிவுகள் வெளியாகும் வண்ணம் JAO LICE தேர்வு முடிவுகளின் மறு பரிசீலனையில் RECRUITMENT CELL ஈடுபட்டுள்ளது. அதன் பின்னர் 2015-16ஆம் ஆண்டிற்கான JTO LICE தேர்வு முடிவுகளுக்கான பணிகள் துவங்கப்படும் என்றும், பிப்ரவரி 15ஆம் தேதிக்குள் முடிவுகள் வெளியிட முயற்சிகளை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

**ஆ) டெலிகாம் டெக்னீசியன் இலாகா தேர்வு:-** டெலிகாம் டெக்னீசியனுக்கான இலாகா தேர்வு தேதியினை அறிவிக்க வேண்டும் என தலைவர்கள் கோரிய போது, இந்த தேர்வு எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களோடு ஒரு கூட்டத்தை விரைவில் நடத்தி முடிவு செய்யப்படும் என பொது மேலாளர் தெரிவித்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**